# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை–வேலூர் மாவட்டம்
## (20.06.2015 முதல் 24.06.2015 வரை)

**கடந்த மூன்று நாட்களில் நிலவிய வானிலை** (16.06.2015 முதல் 18.06.2015 வரை)

வேலூர் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது 1.4 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 31.0–33.0°C மற்றும் 20.0–27.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 64 முதல் 74 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 6–7 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 20.06.2015 | 21.06.2015 | 22.06.2015 | 23.06.2015 | 24.06.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 3 | 4 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்று வரும் திசை | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு |
| வெப்பநிலை °C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை °C | 31 | 31 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை °C | 24 | 24 | 25 | 25 | 25 |
| ஈரப்பதம் | 70–74 | 70–74 | 65–70 | 65–70 | 65–70 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 20.06.2015 முதல் 21.06.2015 வரை ஆகிய நாட்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கன்றுகள், செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு சரியான குடற்புழு நீக்க மருந்து அளித்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
3. சினைப் பிடிக்காத மாடுகளுக்கு தினமும் 50 கிராம் என்ற அளவில் தூது உப்புக் கலவை அளிக்க வேண்டும்.
4. பிறந்த கன்றுகளுக்கு கன்று பிறந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக சீம்பால் அளிக்க வேண்டும்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**
**(வேளாண் அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம்)**

**முக்கிய பயிர்கள்: நெல், கரும்பு மாற்றும் வேர்க்கடலை**
**மானாவாரி வேர்க்கடலை வளரும் பருவத்தில் உள்ளது.**

1. வேர்க்கடலைப் பயிர்களில் களை எடுப்பை மேற்கொள்ள வேண்டும்.
2. எள் பயிரில் காய் துளைப்பான், இலை மற்றும் தண்டு பிணைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 மிலி குயினால்பாஸ் 25 ECஅல்லது வேப்ப எண்ணெய் 2 சதம் தெளிக்கவும்
3. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுளோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேர்ருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.